# கவிச்சரம்



அமரர்
பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர்

ஆசான்கள்



கவிநாயகர்
வி.கந்தவனம்



மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

வெளியீடு

## கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

மார்கழி

2020

சரம் - 3 பூ - 1

# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நிகழ்வில் சில புகைப்படங்கள்























# இதழாசிரியரிடமிருந்து
# நிறைந்த அன்புடன்.............

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

என்னும் வள்ளுவனின் வாக்கியத்திற்கமைய, எமது கடும் முயற்சியினால் இன்று இலக்கண வழுவில்லாத மரபுக்கவிதைகளைப் படைக்கும் ஆற்றல் மிக்கக் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகப் படைப்பாளிகளாகத் திகழ்வதையிட்டுப் பெருமிதமும், பேருவகையும் கொள்கிறேன். புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச்சூழலில் கவிஞர்களுக்காக உருவாக்கப்பட்ட முதல் அமைப்பாக எமது கழகம் விளங்குகிறது என்பதை எண்ணுந்தோறும் எனது உள்ளம் மிகுந்த உற்சாகமடைகிறது.



இக்கழகத்தின் தோற்றத்திற்கு அத்திவாரமாக விளங்கியது, எமது யாப்பிலக்கண ஆசிரியப் பயிற்றுநர்களாகத் திகழ்ந்த, மதிப்பிற்குரிய கவிநாயகர் வி.கந்தவனம், மற்றும் அமரத்துவமடைந்த பண்டிதர் ம.செ. அலெக்சாந்தர் ஆகிய தமிழறிஞர்களின் வழிநடத்தலுடன், எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் தொடக்கப்பட்ட மரபுக்கவிதைப் பயிற்சிப் பட்டறையேயாகும்.

காணுமிடமெங்கும் புதுக்கவிதைகள் பெருகிவரும் இக் காலகட்டத்தில், மரபுக்கவிதைகள் மீளுருவாக்கம் பெற வேண்டுமென்னும் ஆவலுடன் ஆரம்பிக்கப்பட்டதே இக்கற்கை நெறியாகும்.

இப்பட்டறையில் கல்விகற்று வந்த கவிஞர்களின் ஆற்றல்களை

மேம்படுத்தவும், அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், அவர்களுக்கான அமைப்பொன்றினை நிறுவவேண்டும் என்ற எண்ணத்துடனும், மேற்படி எமது ஆசிரியர்களின் ஆலோசனைப்படி, கழக உறுப்பினர்களும் இணைந்து தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் தோற்றம் பெற்றதே எமது இம்மன்றமாகும்.

எமது படைப்பாளிகளின் ஆக்கங்கள் வளம் பெற்றோங்கவும், மக்களின் மத்தியில் அவை மரபுக் கவிதைகளாக உலா வரவேண்டும் என்பதன் அடிப்படையிலும், அவற்றுக்கான மலரொன்றினை வெளியிட வேண்டுமென்னும் எண்ணத்தில் படைக்கப்பட்டதே இக்கவிச்சரம்.

இதன் முதலாம், இரண்டாம் மலர்கள் முறையே 2016, 2019ம் ஆண்டுகளின் தைமாதங்களில், எமது நிறுவனத்தினால் நடத்தப்பட்ட தமிழ்மரபுத் திங்கள் விழாக்களின்போது வெளியிடப்பட்டன. இவ்விதழ்கள் இரண்டும் கனடாவில் மாத்திரமன்றி, வெளிநாடுகளில் வாழும் கவிதை ஆர்வலர்களாலும் வரவேற்கப்பட்டுப் பாராட்டப்பட்டமை, எமது நோக்கம் வெற்றியடைந்தமைக்குச் சான்றாகும்.

தற்போது இம்மூன்றாவது மலரானது, தென்றலாய்த் தித்திக்கும் தேன்தமிழில், நறுமணம் வீசும் இதழ்களுடன் விரிந்து, மிகுந்த புத்துணர்வையும், ஊக்கத்தையும் அளித்தவாறு உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

சில புதிய மாணவர்கள் வகுப்பில் இணைந்து கொண்டமையால், அவர்களும் உள்வாங்கப்பட்டுப் பதினாறு பேராகப் படைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும் இதற்குள் பொதிந்துள்ள பாடல்கள் பன்முகப் பரிமாணத்துடன் பரிமளிப்பதானது, மலரின் அழகினை மேலும் மேன்மைப்படுத்துவதாகவும் அமைகிறது. பக்கங்களும் அதிகரித்துள்ளன.

தமக்கிருந்த பல்வேறுபட்ட வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும்,

நான் வேண்டியதற்கமைய ஆக்கங்களை உரிய நேரத்தில் அனுப்பிவைத்த எமது கழகக் கவிஞர்களுக்கும், கவிச்சரம் மூன்றினை அழகுற வடிவமைத்து, நயத்தகு இதழாகக் கையளித்திருக்கும் எமது கழகத்தின் தலைவர் திரு அகணி சுரேஸ் அவர்களுக்கும் அமைப்பின் சார்பாக எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிவரும் காலங்களில், ஏற்கனவே நாம் தீர்மானித்தபடி இம்மலரானது காலாண்டு ஏடாக வலம்வர வேண்டுமென்னும் எமது விருப்பத்தை நினைவிற் கொண்டு, எமது அமைப்பிலிருந்து மட்டுமல்லாது, வெளியிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஆக்கங்களைத் தருவிப்பதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடவேண்டும்.

இதன்மூலம், கவிச்சரத்தை மேன்மேலும் மெருகுபடுத்தி வெளியிட முடிவதுடன், பல பிரதிகள் அச்சிடப்பட்டு அவை உலகெங்கும் வாழ் தமிழ் நெஞ்சங்களின் மத்தியில் சென்றடைவதற்கான வழிகள் பிறக்கும் எனவும் நம்புகிறேன்.

நல்வாழ்த்துடன்,

**திருமதி பவானி தர்மகுலசிங்கம்**



# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தலைவரின் செய்தி

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் வெளியீடான "கவிச்சரம்" என்ற பெயர் கொண்ட அரையாண்டுச் சஞ்சிகையின் இந்த இதழ் உலகெங்கும் என்றுமில்லாதளவு பாதிப்பை ஏற்படுத்திய கொரோனா நோய் காரணமாக தாமதமாக வெளிவருகின்றது. இந்த இதழ் வெளிவருவதற்காக உழைத்த எல்லோருக்கும் எமது நன்றி. இந்த இதழில் தமது படைப்புக்களைத் தந்துதவிய எல்லோருக்கும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் சார்பில் பாராட்டி மகிழ்கின்றோம். அவர்களுக்கும் எமது நன்றி.



கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் காப்பாளராகவும், எங்கள் எல்லோருக்கும் தனது இறுதி மூச்சுவரை யாப்பிலக்கணம் கற்பித்த தலைசிறந்த ஆசானாகவும் இருந்து அளப்பரிய பணியைச் செய்து அமரத்துவம் அடைந்த அமரர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் அவர்களுக்கு இந்த கவிச்சரம் இதழைச் சமர்ப்பணம் செய்து அவரை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் காப்பாளரும், எங்கள் ஆசானுமாகிய நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைப் படைத்த அறிஞர் கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களுக்கும், மரபுக்கவிதை வகுப்புக்குளைச் செவ்வனே நடத்தி வருகின்ற கவிஞர் கழகத்தின் முன்னாள் தலைவர் மாவிலி மைந்தன் சண்முகராஜா அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவ்வப்போது கவிதை வகுப்புக்களில் கலந்து தமது கருத்துக்களையும், அறிவூட்டலையும் செய்து

வந்த அறிஞர்கள் முனைவர் நா.சுப்பிரமணியன், திரு சம்பந்தன் ஆகியோருக்கும் எமது நன்றி. புதிதாக மரபுக்கவிதைகளை கற்போருக்கான வகுப்புக்களை நடத்திய திருமதி மீரா இராசையா விமலநாதன் அவர்களுக்கும் எமது நன்றி.

சங்ககால இலக்கியங்களில் உள்ள பாடல்கள், திருக்குறள், திருமுறைப் பாடல்கள் எல்லாம் யாப்பு இலக்கண விதிகளுக்கமைய செய்யப்பட்டவை. இத்தகைய மரபு ரீதியான பாடல்களைப் போன்று இக்காலத்தில் மரபுக்கவிதைகள் படைக்கப்பட்டு வருகின்றமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான மரபுக்கவிதைகளை மக்கள் வாசகர்களுக்கு எடுத்துச் செல்வதோடு எதிர்காலத்திலும் மரபுக்கவிதைகள் படைக்கப்படுவதற்கு ஊக்கப்படுத்தும் நோக்கோடு இந்தக் கவிச்சரம் என்ற சஞ்சிகையை உங்கள் வாசிப்பிற்குத் தருகின்றோம்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு மாவிலி மைந்தன் சண்முகராஜா தலைமையிலும், அடுத்து அருட்கவி ஞானகணேசன் தலைமையிலும் பல முன்னேற்பாடான பணிகளை ஆற்றியிருக்கின்றது. இந்த நேரத்தில் கழகம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை பணியாற்றிய நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக கௌரவ செயலாளர் கந்த. ஸ்ரீபஞ்சநாதன் அவர்களுக்கும், பொருளாளர் குமரகுரு அவர்களுக்கும், துணைச்செயலாளர் பவானி அவர்களுக்கும் விசேடமாக நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

இந்த இதழின் இதழாசிரியர் பவானி அவர்கள் மிகவும் நேர்த்தியாகத் தனது பணியைச் செய்ததின் விளைவாகவே இந்த இதழ் வெளிவருகின்றது.

இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருந்த கவிதைப் பட்டறை வகுப்புக்கள் தற்கால நிலைமையினால் தொடங்க முடியாமல் உள்ளதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். இந்த ஆண்டில் முதன்முறையாக அரசநிதியுதவியுடன் நடைபெறவிருந்த பட்டறைகளையும்

தாமதிக்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. நிலைமை சீரானதும் எமது வழமையான செயற்பாடுகள் தொடரும். அதுவரை இணையம் மூலமாக யாப்பிலக்கண வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

அன்புடன்,
கழக நிர்வாக சபை உறுப்பினர்கள் சார்பாக

**அகணி சுரேஸ்**

தலைவர்,
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.

# Thanks....

*Our sincere thanks to Service Canada and the Federal Government for giving financial help through the Senior Horizon Program in the year 2020.*

# வாழ்த்துரை

கவிச்சரம் வெளியீட்டுக்குப் பவானி அவர்கள் பொறுப்பாளராக இருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி.



பவானி எல்லாவிதத்திலும் இக்கவிச்சரத்தை வெளியிடத் தகுதி வாய்ந்தவர். அவருடைய மேற்பார்வையில் இக்கவிச்சரம் திறமாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

அவருக்கு வேண்டிய ஒத்துழைப்பையும், ஆதரவையும் கவிஞர் பெருமக்கள் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சரம் என்பது ஒருவிதமான மாலை. கவிச்சரம் என்று சொல்லப்படும் இக்கவிச்சர மாலை வெளிவருவதில் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருந்தால் தொடர்ந்து நன்றாக வளரும்.

மாலை என்பது ஒரு தொடர்ச்சி. அது அழகையும், சிறப்பையும் இத்தொகுதிக்குத் தரவல்லது.

கவிச்சரம் இதழானது தொடர்ந்து மணம்வீச எல்லோருக்கும் எனது பிரார்த்தனைகள்.

வாழ்த்துகளுடன்,

**வி.கந்தவனம்**



# செயலாளர் அகத்திலிருந்து....

உலகின் புராதன மொழியான தமிழ்மொழியின் பற்றினாலும், ஆர்வத்தினாலும், மரபுவழியில் கவிதை எழுதவிரும்பி 2007ஆம் ஆண்டு கனடா எழுத்தாளர் இணையத்தால் ஆரம்பிக்கப் பெற்ற கவிதைப் பயிற்சி பட்டறையில் யாப்பு இலக்கணம் கற்க ஆரம்பித்தேன். இக்கற்கை நெறிக்கு ஆசான்களாக இருந்த அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய கவிநாயகர் கந்தவனம், அமரர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் ஆற்றுப் படுத்தலில் யாப்பினைக் கற்றேன். இப்பட்டறையில் பொரும்பாலும் தமிழ்மேல் தீராத காதல் கொண்டவர்களே கற்றார்கள்.



தொடர்ந்து சீராக யாப்பினையும், அணி இலக்கணத்தையும் கற்றோம். கற்ற மாணவர்கள் ஒன்றிணைந்து இரு பேராசான்களின் விருப்பப்படி 2011ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி முறைப்படி கூட்டம் கூடிக் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தை ஆரம்பித்தோம்.

இக்கழகத்தில் யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் தவிர எட்டுத்தொகை நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு, நீதிநூல்கள், கம்பராமாயணம், ஐம்பெரும் காப்பியம் போன்ற அற்புதமான இலக்கியங்களைக் கற்றும், வெளிநாட்டிலிருந்து வரும் அறிஞர் பெருமக்களையும், உள்ளாட்டு அறிஞர்களையும் அழைத்து, கலந்துரையாடி மகிழ்வுற்றும், நமது அறிவினை வளர்த்து வருகின்றோம். எமது கழகத்தில் உள்ள எண்மர் கன்னி முயற்சியாகப் “பொதிகைப் புதுமலர்” என்னும் மரபுக் கவிதைத் தொகுப்பு நூலை 2012ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி வெளியிட்டோம்.

எமது கழகத்தை இன்றுவரை நிர்வகித்து, திறம்பட நடத்தி வந்த, வருகின்ற பிரதான நிர்வாகிகள்.

2011ஆம் ஆண்டு முதல் - 2014ஆம் ஆண்டு வரை

தலைவர் : சின்னத்தம்பி சண்முகராஜா
செயலாளர் : ஞானகணேசன் தம்பிஜயா
பொருளாளர் : கந்தசாமி ஸ்ரீபஞ்சநாதன்

2014ஆம் ஆண்டு முதல் - 2018ஆம் ஆண்டு வரை

தலைவர் : ஞானகணேசன் தம்பிஜயா
செயலாளர் : ராஜ்மீரா இராசையா
பொருளாளர் : ஸ்ரீராஜன் கண்ணுத்துரை

2018ஆம் ஆண்டு முதல் - தற்போது வரையில்

தலைவர் : அகணி சுரேஸ்
செயலாளர் : கந்த. ஸ்ரீபஞ்சநாதன்
பொருளாளர் : குமரகுரு கணபதிப்பிள்ளை

எமது கவிஞர் கழகம் ஆரம்பிக்கப் பெற்று, எட்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இன்றுவரை கவிதைப் பட்டறை வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. எமது அங்கத்தவர்கள் பலர் கவியரங்குகள் சொற்பெருக்குகள், வில்லுப்பாட்டு நிகழ்வுகளில் பங்கு பற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். அத்துடன் கழகத்தின் ஊடாகவும், தனித்தும் புத்தக வெளியீடுகளும் செய்திருக்கின்றார்கள். மேலும் கீதவாணிக் கவிதை நிகழ்வில் பங்குபற்றியும் வருகின்றார்கள். TET தொலைக்காட்சியில் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் தலைமையில் நடந்த கவியரங்கில் எமது கவிஞர்கள் பங்குபற்றிச் சிறப்பித்துள்ளார்கள். அத்துடன் கவிஞர் கழகத்தின் காப்பாளர்களான கவிநாயகர் கந்தவனம், பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் இருவருக்கும் அன்புத் தேனமுதம் என்ற அமிழ்தான நூலை 2016 வைகாசி மாதம் வெளியிட்டுக் கௌரவித்திருக்கின்றோம்.

எமது கழகம் கனடாத் தமிழ் மரபுத் திங்கள் அமைப்பின் ஆரம்பப் பங்காளியாகும். உழவர் திருநாளாம் தைப்பொங்கல்

திருநாளை வெகு சிறப்பாக, 2013ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நடத்திக் கொண்டு வருகின்றோம். அவ்விழாவில் பட்டிமன்றம், வில்லுப் பாட்டு, கவியரங்கம், நாடகம் என்பன வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இது தவிர கனடா இந்து சமயப் பேரவை, ரொரண்ரோ தமிழ் சங்கம், கனடா எழுத்தாளர் இணையம் ஆகிய சங்கங்களின் அழைப்பை ஏற்றுக் கவியரங்கம் நடத்தியுள்ளோம். கீழே காணப்படும் ஆண்டுகளில் எமது மரபுத் திங்கள் விழாக்கள் நடைபெற்றன.

2013ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி கனடா முருகன் சந்நிதி மண்டபம், 2014ஆம்ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி கனடா நயினாதீவு கோயில் மண்டபம், 2015 ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி TET தொலைகாட்சி நிலைய மண்டபம், 2016 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி ஸ்ரீசெல்வச்சந்நிதி மண்டபம், 2017 ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி ஸ்ரீசெல்வச்சந்நிதி மண்டபம், 2019 ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி Delta academy மண்டபம், 2020 ஆம் ஆண்டு ஜனவரி 18ம் திகதி Front line community மண்டபம் ஆகியன.

எமது கழக உறுப்பினர் கலாநிதி தில்லை சிவகுமார், மற்றும் ஆசான் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் ஆகியோர் அமரத்துவம் எய்தியதால் நாங்கள் மரபுத் திங்கள் விழாவை 2018ஆம் ஆண்டு நடத்தவில்லை. 2018ஆம் ஆண்டு பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் நினைவேந்தல் விழாவினை எங்கள் கழகம் 07.04.2018ல் ஸ்காபரோ குடிமை மையத்தில் நடத்தினோம். 2019ஆண்டு நவம்பர் 2ஆம் திகதியில் Front line community மண்டபத்தில் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்கட்கு நினைவேந்தல் விழாவினை நடத்தினோம். கலாநிதி தில்லை சிவகுமார் அவர்களையும் நினைவு கூர்ந்தோம். அத்துடன் ஆசான் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் குடும்பத்தின் மரம்நடு விழா அழைப்பை ஏற்று 2019.08.11ல் கலந்து சிறப்பித்தோம்.

காப்பாளர், பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அமரத்துவம் அடைந்தபின் திரு. சி.சண்முகராசா அவர்கள் யாப்பினை

வெகு சிறப்பாக கற்பித்துக் கொண்டு வருகிறார். யாப்பினை ஐயம்திரிபறப் படிக்க விரும்புகிறவர்கள் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

எமது முதல் “கவிச்சரம்” முந்நாள் பொருளாளர் ஸ்ரீராஜன் கண்ணுத்துரை அவர்களின் அனுசரனையுடன் 2016 ஆம் ஆண்டு தை சனவரி 31ஆம் திகதி கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதியில் நடந்த பொங்கல் விழாவில் மிகவும் சிறப்பாக வெளியிடப் பெற்றது. இம் மலருக்குப் பெரும்புலவர் முஹமத் ஹன்சீர் ஆசிரியராக இருந்தார். தைப்பொங்கல் விழா 2019ஆம் ஆண்டு சனவரி மாதம் 20ஆம் திகதி நடத்தினோம். அவ்விழாவில் பல கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. எமது அங்கத்தினர் கடும் குளிரிலும் விழாவினை மிகவும் சிறப்புறச் செய்தார்கள். முக்கியமாகச் சஞ்சிகையான “கவிச்சரம்” இதழ்-2 வெளியிடப்பட்டது. இம்மலர் எங்கள் பேராசான் செந்தமிழ்ச் சிற்பி பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தரின் சிறப்பு இதழாக வெளிவந்தது. இதழ் இரண்டுக்கு அருட்கவி த.ஞானகணேசன் அவர்கள் ஆசிரியராக இருந்தார்.

இவ்வருடம் எமது கழகத்தின் முக்கிய நோக்கம் பாரதி பாடியதுபோல் “தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வதே யாகும்” தமிழுக்காகத் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டு தன்னலமற்ற சேவையினைச் செய்து கொண்டிருக்கும் அன்புக்குரிய எமது காப்பாளர் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் ஆலோசனையின்படி நடப்பதால், எமக்கு மேலும் ஒளிமயமான எதிர்காலம் உண்டென்பதில் மிகவும் நம்பிக்கையாக இருக்கின்றோம். அவர் நீடுழி வாழவேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றேன்.

2019ஆம் ஆண்டு விசேடம் நிறைந்த ஆண்டாகும். 2019ஆம் ஆண்டில் தீவகம் இராசலிங்கம் “கனடாக் காவியம்” என்ற கவிதைத் தொகுப்பை கனடாவில் வெளியீடு செய்து நமக்குப் புகழைச் சேர்த்தார். அருட்கவி த. ஞானகணேசன் “அருட்கவியமுதம்” என்ற படைப்பைத் தமிழ்நாட்டில் திருவள்ளுவர் சேதுராமன் அவர்களின் தலைமையில் வெளியீடு செய்தும், பின்னர் கனடாத் தமிழ்க் கவிஞர் கழக வெளியீடாகக்

கனடாவிலும் வெளியிட்டு எமக்கெல்லாம் பெருமை சேர்த்தார். அவரைப் போல் எங்கள் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் தமிழ்நாட்டில் பரிசு பெற்ற "இன்னும் இருக்கின்றது இனிய வாழ்வு" நாவலை இந்தியாவிலும், கனடாவிலும் வெளியீடு செய்து மேலும் பெருமையை உயர்த்தினார். எங்கள் உபசெயலாளர் திருமதி த.பவானி அவர்களும் "வியன்களம்" என்ற போர்க்காலப் பாடல்களை உள்ளடக்கிய நூலையும், "கொற்றவை" என்னும் இசைத் தொகுப்பையும் உணர்ச்சியுடன் கவிதை படைத்து மற்றவர்களையும் வீரக்கவிதை புனையத் தூண்டியதுடன், இவரும் இலண்டன் மாநகரிலும், கனடாவிலும் இவற்றை வெளியீடு செய்து மிகப் பெருமை கொள்ளவைத்தார். சந்தக் கவிஞர் அச்சுவேலியூர் கு.கணேசன் அவர்கள் "என்மன வானில்" மரபுக் கவிதை மலரை வெளியீடு செய்து மகிழ்ச்சிக் கடலில் மிதக்கவிட்டார்.

கவிச்சரம் இரண்டினை அழகுற அச்சிட்டு வழங்கிய தலைவருக்கு நெஞ்சாரக் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கவிச்சரம் மூன்றின் இதழுக்கு ஆசிரியராகத் திருமதி த.பவானி அவர்கள் பணியாற்றி வருகின்றார். கவிச்சரத்தில் காணும் படைப்புக்களை முன்பு மதிப்பீடு செய்து அறிவுரை வழங்கியது போல் என்றும் வாசகர் ஆகிய நீங்கள் கருத்தினைக் கூறி எங்களைத் தொடர்ந்து தமிழுக்கு பணியாற்ற வைப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் மீண்டும் வாழ்த்தி, உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

அன்பின்,

**கந்த.ஸ்ரீபஞ்சநாதன்**

செயலாளர்,
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்



# எதிலும் வெற்றி சூழும் நாளை!



மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

நேற்றை வாழ்வில் தோல்வி கண்டு
நெஞ்சு டைந்து போவதோ
காற்றும் மாறிப் புயலு மாகிற்
கடந்து போவ தில்லையோ?
கீற்று மெல்லத் தெரியும் போது
கிழக்கு வெளுத்து விடியுமே
ஏற்றம் காணும் இலக்கை நோக்கு
எதுவு முன்னால் முடியுமே!

மடுவை ஊதி மலைபோ லாக்கில்
மனமு டைந்து போகுமே
கொடுமை யான கூற்றன் உன்னைக்
கொண்டு போகக் கூடுமே!
நடுக்க முற்று நாடி சோர்ந்து
நாவும் காய்ந்து போகுமேல்
அடுத்து என்ன செய்வ தென்ற
அறிவு மற்றுப் போகுமே!

வாழ்க்கை என்றும் மலரில் வேய்ந்த
மஞ்ச மல்ல ஓர்ந்திடு
தாழ்வு முண்டு வாழ்வு முண்டு
தாங்கு முள்ளம் தேர்ந்திடு!
சூழ்ந்து கொள்ளும் மேக மூட்டம்

சூறைக் காற்றில் நீங்குமே
வீழ்ந்த வேளை வீறு கொண்டால்
விடியல் வந்து தாங்குமே!

உன்னை நீயே உணரும் போது
உனது ஆற்றல் விழிப்புறும்
அன்னை தந்தை மரபு வந்த
அனைத்து மப்போ வெளிப்படும்!
முன்னர் உற்ற தவறி லுண்மை
முயன்று கற்றல் பாடமே
என்ன வென்றும் ஏனி தென்றும்
எழுப்ப ஞானம் கூடுமே!

புதிய வாழ்வின் தொடக்க மாகப்
புதிய நாளைப் போற்றிடு!
விதியை வெல்ல வீறு கொள்ளும்
வேகம் நெஞ்சி லேற்றிடு!
நதியைப் போல நாளு மோடு
நலங்கள் யாவும் சேர்த்திடு!
எதிலும் வெற்றி சூழும் நாளை
எண்ணி நம்பி வாழ்ந்திடு!



# பூசலார் நாயனார்



கந்த.ஸ்ரீபஞ்சநாதன்

கங்கை அணிந்த கடவுள் பத்தியால்
காதல் கொண்டு கோயில் அமைக்க
திங்கள் சூடிய தில்லைச் சிவனார்
திருவடி தொழவே தானே தனித்து
மங்கலம் கொண்ட மகாதே வருக்கு
மனத்தால் கோயில் தானும் செய்த
எங்கள் மகேஸ்வரர் தொண்டர் பூசலார்
என்ற புனிதரை உரைக்க உற்றேன்.

தொன்மை நிறைந்த தொண்டை நாடு
தூய்மை ஒழுக்கம் உயர்ந்து விளங்கும்
பன்மைக் குணங்கள் குறையா மறையோர்
பண்புடன் நான்மறை படிக்கும் மூதூர்
இன்புடன் பூசலர் திருநின் றவூரில்
இனிதாய்ச் சீலராய் வாழ்ந்து வந்தார்.
அன்பரோ சிவனின் அடியார் களுக்கு
ஆவலாய்த் தொண்டு பணிவுடன் செய்வார்

ஆய கலைகளின் சிவனுக்கு அடிகள்
அன்பினால் உணர்ந்து கோயில் அமைக்கவே
நேயமாய் பொருளும் தேடி முயன்று
நினைத்தது கிடைக்கா தமையால் வருந்தினார்

காயம் பொய்யென நம்பி மனத்தினால்
கட்டுப் பட்டு ஆலயம் அமைத்தார்.
தூய சிந்தனை கொண்டு தனது
தகுதியை நிலமையை என்றும் எண்ணியே

மனத்தில் ஒன்று பட்டு நினைத்து
மாநிதி வருந்தித் தேடி மகிழ்ந்து
வினையில் நல்நாள் அடிக்கல் நாட்டி
வனத்தின் நல்ல மரங்கள் கொண்டே
கனமாய்க் கோபுரம் தச்சரும் செய்தே
களிப்புடன் கோயில் கட்டத் தொடங்கினார்
நினைப்பினால் கிணறு குளம்மதில் சகலதும்
நினைத்து அழகுற ஆலயம் அமைத்தார்

காடக மன்னன் காஞ்சியில் ஆலயம்
கட்டியே பிரதிட்டை நாளும் குறித்தார்
ஆடலர் பெருமான் அந்நாள் முதல்நாள்
அரசர் முன்பு கனவிற் தோன்றி
நாட முடியா நாளில் நீயும்
நல்பிர திட்டை வைத்திருக் கின்றாய்
வேடம் போடா பூசலர் இந்நாள்
பிரதிட்டை செய்கின்றார் திருநின் றவூரில்

அன்று அவரது ஆலயம் புகுவேன்
ஆதலால் நாளை ஒழிந்துநீர் பின்செய்
என்றார் மன்னவன் திருப்பணி முடித்துப்
பூசலர் திருநின்ற வூர்செல்ல விரும்பி
அன்று பயணம் திருநின்றவூர் போந்து
அன்பர் பூசலர் பற்றி விசாரணை
நன்று செய்து அவரைக் கண்டு
நீவீர் வழிபடச் செய்த ஆலயம்

யாது? இங்கு ஈசனைத் தாபித்து
யாவரும் அருள்பெறும் பிரதிட்டை என்று
ஆதவன் வணங்கும் ஆண்டவன் கனவினிலே
தோன்றிச் சொன்னார் ஆதலால் வந்தேன்
வேதம் தெரிந்த பூசலரை அடிபணிந்து
வணங்கி அருள்பெற வந்தேன் என்றார்
நாதன் அன்பு கொண்டவர் கோயிலை
நன்கு வணங்கி ஆசிபெற வேண்டும்.

மன்னவன் உரைகேட்டு மருண்டு நோக்கி
மண்ணில் என்னையும் பொருட்டாய் மதித்தாரே?
அன்பரே ஈசனுக்கோ நானோ மனத்தினால்
அழகாய்க் கோயிலைக் கட்டினேன் என்றார்
சொன்னதும் மன்னன் நிலத்தில் வீழ்ந்து
தரிசித்து அதிசயம் எய்தி நாடுசென்றார்
அன்பர் பூசலார் சிந்தை முழுவதும்
அரனார் தன்னை அகத்தால் பூசைகள்
நன்கு பலநாள் பேணியே பெருமையாய்
நாதன் பொற்கழல் நிழலடி புகுந்தார்

மண்ணிலே கோயில் மனத்தினால் கட்டிய
புண்ணியம் மிக்க புனிதரோ - தொண்டைநாட்டுச்
செம்மலர் பூசலர் சேதிகளைக் கேட்டோர்கள்
இம்மையில் போற்றுவீ ரே!

அன்பின் திருநின்றவூர் - தின்னனூர். பல்லவகோ

# உள்ளமும் ஓங்கி ஒலிக்கிறதே!

*(கட்டளைக் கலித்துறை)*



**பவானி தர்மகுலசிங்கம்**

அழியாது ஆன்மா, அறிஞர் உரைத்தார் அனுபவமே!
விழிகாட்டி மேலெழும் புள்ளும், குடம்பியை விட்டகலல்,
எழிலுறு மேனியை ஆன்மா துறத்தலே என்றுரைத்தார்
பொழிலுறு வேதக் குறளீந்த வள்ளுவப் பொற்கவியே!


இறப்பினை ஆன்ம விடுதலை என்பர், இயற்கையன்றோ?
பிறந்தவர் வாழ்வில் இறப்பும் உறுதி, பிதற்றலேனோ?
அறத்துடன் வாழ்ந்தோர் பிறந்திலர், ஆன்றோர் அருளுரைத்தார்.
மறுத்துரைப் போருமிப் பாரினில் உள்ளனர், மாறுபாடே!

முறிந்த பனைமரம் வாழ்வினில் மீண்டும் முகிழ்ப்பதில்லை.
எறிந்த மலரைக் கனியை மரங்களும் ஏற்பதில்லை.
தெறித்தவெண் சங்கினுள் ஓசை உயிர்ப்புடன் சேர்வதில்லை.
இறந்தோர் பிறவா ரெனச்சொல்வர், ஏற்க இசைந்திலேனே!

பேருந்து யாத்திரை யேயெம்வாழ் வென்று பெரிதுரைப்பார்
நேரமும் சேர்ந்திட ஊர்தி நிறுத்தல் நியதியென்பார்.
சீருடை யான்மாவும் யாக்கையை மாற்றிடத் தேர்ந்திடுமாம்
பாருளோ ராடையை மாற்றலல்போ லென்று பகருவரே!

கண்ணன் அவதாரம் பத்தெனும் நீண்ட கதையுமுண்டு.
மண்ணில் மறுபிறப் புண்டென்று ஞானிகள் மன்னுரைத்தார்
வண்மை வடிவமாம் புத்தரும் வாழ்வில் வலிந்துரைத்தார்
உண்மையை ஆய்ந்திட உள்ளமும் ஓங்கி ஒலிக்கிறதே!

# பாடலும் தேடலும்!



**தேசபாரதி தீவகம் வே.இராசலிங்கம்**

ஆடா தோடை ஆடு தின்னாது
மாடாய் விரும்பி வைக்கலும் அருந்தும்
ஏடாய் இருந்தால் இலக்கியம் ஆக்கும்
காடாய் மலரும் கருவளை பூக்கும்

சோடை போகாத சொல்லுவ தெல்லாம்
காடையென் றாகக் கணக்குத் தராது
தோடையென் றெண்ணிக் கூடையைக் கொடுக்கும்
சாடையில் வருவது சருகதும் வாழும்

பாடையையும் காவும் பவித்திரன் கூட
கூடராய் நின்றுமே கூற்றொடும் வருவான்
பாடாய் எடுத்துப் பரப்புரை யாக்கும்
கேடார் மனிதரும் கூப்பிடு வர்காண்

ஆடை புனையா அம்மணத் தோரும்
சோடாய் இருக்கச் சோதனை தருவார்
மூடாய் மலிய முகமிழந் தோரும்
கூடாய் இருந்து கொடுப்பராம் தீயை

சோடாய் இருக்கச் சோறிடா ஒருவன்
தேடா திருத்தல் திருமணம் ஆகும்
நாடாய் இருந்தால் நற்சமு தாயம்
பேடாய் இருக்கப் பிரசவம் நடக்கும்

சாடை அழிக்கும் சாதியாய் மாறின்
வீடே பற்றும் வெந்தழல் ஆகும்
ஊடாய் ஒழியும் ஊறுகள் இறுகும்
பாடாய் அரசைப் பற்றிடும் நெருப்பே

தேடல் எனக்கொரு தீந்தமிழ் ஆகும்
பாடல் எனக்கொரு பரம்பொருள் பேசும்
ஆடல் கலைகளின் ஆலயம் ஆகும்
சூடாய் இருந்தால் சித்திரம் மறுகும்

ஆடல் சிவனும் அருங்கலை யாகும்
மூடல் எதுவும் மூர்ச்சை யுறாதே
பூடகம் அனைத்தும் பூமியின் அலகே!



# பாரெலாம் ஓங்குது பைந்தமி ழோசை!



அருட்கவி தம்பிஜெயா ஞானகணேசன்

## கும்மி

பாரெலாம் பைந்தமிழ் பாடுதல் போற்றியே
பாடுவோம் வாரீரெம் பாவலரே!
தாரணி தன்னிலே தங்கமாம் செம்மொழி
தங்கிட வைத்ததெம் ஈழவரே!

வங்கத்தைத் தாண்டியே வந்த எமதினம்
வாழும் அழகினை பாடிடுவீர்
பொங்க லரிசியைப் போட்டுப் பிரதமர்
போந்த சிறப்புரை போற்றிடுவீர்!

சங்கரின் புத்திரன் சண்நீதன் லோகனும்
தம்பி விஜேதணி காசலம்போல்
எங்கள் இனத்திலே ஏற்ற தலைமையை
என்றென்றும் தேர்ந்துநாம் இன்புறுவோம்.!

பாராளு மன்றிலே பைந்தமிழ் மந்திரி
பற்பலர் தோன்றிடச் செய்திடுவோம்
பாரெலாம் பைந்தமி ழோசை பெருக்குவோம்
பாரதி சொர்க்கத்தில் இன்புறவே!

வர்த்தகம் வாணிபம் வாய்ப்பாட்டு சங்கீதம்
வாசிக்க ஆயிரம் பத்திரிகை

நர்த்தனம் நாட்டியம் நாளெலாம் மேடைகள்
    நம்கலை ஓங்குது நாடெலாமே!

பனங்காய்ப் பணிகாரம் பாலப்பம் தோசையும்
    பார்த்திட வாயூறும் பனாட்டுடனே
கனடிய மண்ணிலே காணாத தீனுண்டோ
    காரமாய்க் கூழிங்கு உச்சமப்பா!

காதல் பெருகுது கல்யாண மண்டபம்
    காணுமிட மெங்கும் களிப்புறவே
ஈதல் கொடைகளில் இம்மண் முதலிடம்
    எத்திசை நோக்கிலும் எம்வணிகம்!

எம்கலை பண்பாடு எங்கும் சிறக்குது
    ஏற்றமாய் எம்மொழிப் பள்ளிகளும்
எம்மொழி யெம்மதம் எங்கும் சிறக்குதே
    ஏதும் தடையுண்டோ இம்மண்ணிலே?

அன்னைத் தமிழ்மக்கள் அத்தனை கோடியும்
    அன்புட னொன்றாகச் சேர்ந்திடிலே
மண்ணையு மெங்கள் மரபையும் காக்கலாம்
    எண்ணித் திரளுக தோழர்களே!



# வற்றாப்பளை கண்ணகை அம்மன் பாடல்



அகணி சுரேஸ்

**தொகையுறா**

வன்னி மண்ணின் காவல் தெய்வமாய் நின்தலம் வற்றாப்பளையில்

வீற்றிருக்கும் கண்ணகை அம்மனே போற்றி! போற்றி !! நின்திருவடிகள் போற்றி! போற்றி!! போற்றி!!!.

**பல்லவி**

வற்றாப்பளை அம்பாளே! வந்துநீ அருளிடுவாய்
பற்றோடு நின்பாதம் பாடியாடி வணங்கிடுவோம்
முற்றான உன்னருளை முக்திவரை பெற்றிடுவோம்
வற்றாத ஊற்றாக வாஞ்சையோடு காத்திடுவாய்

சங்கீத ஸ்வரங்கள் ....

**சரணம் 1**

நந்திக்கடல் திசைமேற்கில் நன்நாளில் நீயுதித்தாய்
பந்தமுடன் வேம்பின்கீழ் பாங்குறவே வீற்றிருந்தாய்
அடியார்கள் கனவினிலே அழைப்பும் நீவிடுத்தாய்
வடிவான சோலையில் வாஞ்சையோடு நீயுள்ளாய்

கண்ணகை அம்மனாய்க் காட்சிகள் நீதந்தாய்
வண்ணமுறு ஆலயமாம் வற்றாப்பளையில் வாழ்கிறாய்
கண்ணைப் பறித்துக் கள்வனைத் திருத்தினாய்
திண்ணமுறப் பக்தருக்குச் செல்வமெலாம் ஈந்திட்டாய்
(வற்றாப்பளை அம்பாளே! வந்துநீ அருளிடுவாய்)

**சரணம் 2**

கர்வம்கொள் பறங்கியரைக் காய்வீழ்த்தித் துரத்தினாய்
தர்மங்கள் மேலோங்கத் தாயாக நீயிருந்தாய்
எண்ணெயில்லா நீரினிலே எரியும்தீபம் ஏற்றினாய்
எண்ணற்ற அற்புதங்கள் இத்தலத்தில் நீபுரிந்தாய்
வேப்ப மரத்திலே பாலினைச் சொரிந்திட்டாய்
கூப்பிடக் காவலனாய்ப் பாம்பும் வரவழைத்தாய்
தீராத நோயெல்லாம் தீர்த்துத் துணைநின்றாய்
ஊரெல்லாம் கூடிவர உன்னருள் பொழிகின்றாய்
(வற்றாப்பளை அம்பாளே! வந்துநீ அருளிடுவாய்)

**சரணம் 3**

வற்றாப்பளை அம்பாளே! மறவோம் நாமும்மை
நற்றவம் செய்துமே நாளெல்லாம் தொழுதிடுவோம்
கொற்றவை நீயெங்கும் குலதெய்வம் நீயம்மா
உற்ற துணையாக உடனிருந்து காத்திடுவாய்
காத்திடுவாய் அம்மா கண்ணகை அம்மா
தோத்திரங்கள் செய்திடுவோம் தோன்றிடுவாய் தேவியே!
(வற்றாப்பளை அம்பாளே! வந்துநீ அருளிடுவாய்)

# கொல்கிருமியைக் கொல்வோம்



இராஜ்மீரா இராசையா

கொத்துக் கொத்தாய்க் கொன்றொழிக் கிருமி
நித்தம் நித்தம் நிம்மதி கெடுக்குதே
சித்தம் கலங்கிடச் செய்வன சிதைந்திட
வித்தெனத் தெறித்து வெறித்தனம் புரியுதே

சீன வைரசெனச் சிலரோ செப்பினர்
வீணாய் உலகை விரட்டி அழிக்கப்
பாழாய் யாரோ பவனியாய் அனுப்பிய
தாழா உயிரிதான் தப்பிலை யுமென்பர்

குவலயச் சனத்தொகை குறைத்திட எண்ணி
அவலமாய் அழித்திட ஆக்கிய உயிரியே
கொறோனாக் குழுவில் கூடி உள்ளதாய்
சிறப்பிலாக் கருத்துகள் சீராய்ப் பரவின

நீர்வளம் காக்க நிலத்திடை உயிருடைப்
பாரறி ஒட்டகம் பத்து ஆயிரம்
அலறிட அந்தோ அவுத்தி ரேலியா
உலங்குவா னூர்தி ஊடே பறித்ததாம்

காசினி மாசினைக் கட்டுப் படுத்தவே
கூசிடா மாந்தர் கொட்டிய கிருமியே
நாசம் செய்யுது நானிலம் முழுவதும்
பாசப் பிணைப்பொடு பகர்கிறார் பன்மொழி

வல்ல அரசாய் விளங்கும் போட்டியில்
வெல்ல முடியா வலிமை நாடாய்
விளங்கிடச் சீனா விதைகிரு மிதானென
விளம்புவோர் பலருளர் வியப்பிலை என்கிறார்

தனிநபர் இடைவெளி தப்பா துகாப்போம்
கனிவொடு பிறரையும் காத்தே நிற்போம்
முகத்தை வாயை மூடி மறைப்போம்
நகத்தொடு கைகளை நன்றாய்க் கழுவுவோம்

தும்மல் இருமல் துளிகள் தெறிப்பு
எம்கைத் துணியால் எளிதாய்த் தடுத்து
பிறர்நலம் பேணவும் பெரிதாய் உதவிச்
சிறப்பு உலகைச் செதுக்கிட உழைப்போம்

ஆயிரக் கணக்கில் அடியிலா மரம்போல்
சாய்கிறார் நாளும் சலிக்கிறார் கேட்போர்
எதிர்ப்புச் சக்தி இல்லா மாந்தரை
எதிரில் வந்து எளிதில் தாக்குமாம்

விற்றமின் 'சீ'யது விளைந்துள பழவகை
மற்றும் உள்ளி மஞ்சள் இஞ்சி
மல்லி சீரகம் மிளகு வெந்தயம்
கொல்லுமே கிருமியைக் கொள்ளுவீர் நாளுமே!



# வாழ்க்கைச் சித்திரம்



முருகேசு மயில்வாகனன்

அறமென்னும் அருமருந்தை அன்றாடம் செய்வோர்க்குச்
சிறப்பான வாழ்வுடனே செல்வமும் சேர்ந்திடுமே
உறவோடு ஒட்டாது ஓரைந்தை ஒழிப்பதற்குச்
சிறப்பாகச் செயற்பட்டால் சீரான வாழ்வதுவே.

மனமதில் மாசகல மனிதம் ஓங்கும்
இனபேதம் தானகலும் இன்பஞ் சேரும்
தனஞ்சேரும் சேர்ந்தஅத் தனமோ அறஞ்சார்
மனவழி செலவாக ஆனந்தம் மேலோங்கும்.

ஆனந்தம் மேலோங்க அன்பு பெருகிடுமே
தானம் தவமிரண்டும் தனித்துவம் பெற்றிடுமே
ஈனத் தொழில்செய்தே ஈட்டும் பொருளாலே
மானம் இழப்பர், மக்களுள் மாக்களாவர்.

அறத்தில் சிறந்தது ஐம்பொறி அடக்கமே
துறந்தார்க்கும் துவ்வார்க்கும் துணையா யிருந்தாலே
பிறவாமை யாமிந்தப் பேரின்பம் சேர்வதற்கு
அறியாமை யாமிந்நோய் அகல வேண்டும்.

பொறாமை பேராசை பொருந்தாக் கடுஞ்சொற்கள்
உறாஆக் கடுங்கோபம் உறுநோய்க் கறிகுறியே
சிறைப்பட்ட வாழ்வின் சிக்கலைத் தீர்க்க
அறவழி வாழ்ந்தால் அதுவே மருந்தாமே.

அல்லலிலா வாழ்வு அகத்தில் தொடர்வதற்கு
இல்லாள் இணைவு ஏற்றதாய் அமைந்தால்
வல்லவளே வாழவைப்பாள் வாய்ப்பறிந்தே உந்தனையே
இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை.

இல்லாள் மட்டுமல்ல இணைந்திருக்கும் நட்டாராம்
நல்லாரின் நயம்படு பேச்சும் நல்லறமாம்
இல்லறத்தை நலிவின்றிக் காப்பது இல்லானின்
வல்லமை மட்டுமல்ல வலிமைசேர் இல்லாளுமே.

விட்டுக் கொடுத்தே வினைதீர்க்கும் வல்லவனே
முட்டவரும் துன்பத்தை முறுவலுடன் தீர்த்திடுவான்
நட்டநயம் பாராது நற்பணிகள் செய்வோர்க்கு
தட்டுப்பா டின்றியே தான்விரும்பும் பதவிவரும்.

இல்லறமே நல்லறமென் றெம்பாட்டன் சொல்லிவைத்த
நல்லதந்த முப்பாலை நாளும் கடைப்பிடித்தால்
நல்லிதயங் கொண்ட நாயகியும் பிள்ளைகளும்
செல்வச் செழிப்பும் சேர்ந்தொன்றாய் வந்திடுமே.

வாழ்க்கை யென்பது வனாந்திர பூமியல்ல
ஆழ்ந்தறிவு கொண்டோரின் அறிவுரையும் அன்பும்
ஒழுக்கஞ்சேர் பண்பாடும் ஒன்றிணைந் திட்டாலே
இழுக்கேது மில்லாத இன்பப் பூமியிதே.



# எங்கள் பொங்கல்



பெரும்புலவர் முஹமத் ஹன்ஸீர்

அன்பும் பண்பும் அறிவிற் தெளிவும்
எம்மில் என்றும்  ஏற்றிடும் தமிழில்
இன்பம் பொங்கும் பொங்கல் தினத்தை
இன்னும் இனித்திட லாக்கிட தாக
நண்பர்க ளோடும் உறவுக ளோடும்
நன்றாய்க்  கொண்டா டிக்களித் திடவே
நலமெல் லாமும் நம்மில் வந்திடும்
உத்தம நாளின் உன்னத மகிமையை
எத்தனை முறைதான் எடுத்தியம் பினாலும்
அத்தனைக் கும்அதற் கப்பாலும் பற்பல
ஆயிரம் விடயம் அதிலூற் றெடுப்பதை
வாயினால் கூறியும் கையினால் எழுதியும்
இன்பத் தேனாய் விடயம் விரிந்திட
நன்றாய்த் தமிழும் இதற்கெனக் கிடைத்தால்
இவ்வின் பத்துக் கீடே உண்டோ?

அன்புரு வான எம்தமிழ் மக்களே!
அனைவர்க் கும்எம் பொங்கல் வாழ்த்து.
என்றும் மகிழ்ந்து இன்புற் றிருக்க
இறைவன் ஆசியும் இத்துடன் சேர்த்து
என்றும் நன்றாய் ஒன்றாய் வாழ்ந்து
உழைத்து வாழும் வாழ்வினி லன்றோ
பிழைப்பி லாகிட வேண்டிய தென்று

நிலைத்த ஆதனம் நிறையத் தந்த
இறைவனுக் கன்றோ முதலில் நன்றி.
இந்திர னுக்கும் இற்றை மாதம்
விழா வெடுத்த கதைகள் உண்டு.
மழைவரு வித்த காரண மவரென
அத்தே வனுக்கும் நன்றி செலுத்தினர்.

இயற்கை யென்று இருந்திட வில்லை
இதற்கும் நன்றி செலுத்தினர் தமிழர்.
கடவுளி னாலே அருளப் பட்ட
ஆதவ னுக்கும் அருட் கடவென்று
கடவு ளென்றே சூரிய பகவானை
அவர்க்கும் நன்றிக் கடனைச் செலுத்தினர்.
சர்க்கரைப் பொங்கல் சூரிய னுக்கே
சமைத்துப் படைத்தனர் காய்கறிக் குழம்பும்
இன்பம் நிலைத்திட உதவிய இவரை
மரியா தையுடன் வணக்கம் செலுத்தினர்.

வீட்டை நன்றாய்ச் சுத்தம் செய்து
பழையன கழித்துப் புதியன புகுத்திப்
புத்துடை யணிந்து புதுப்பொலி வாகி
இத்துடன் இன்னும் நன்மகிழ் வாகி
இருந்திடும் நன்னாள் போகிப் பொங்கல்
மண்ணுக் கும்மரி யாதை யேயெனப்
பூமா தாவெனப் புவியில் புகழ்ந்திட
எண்ணிய இன்பத் தமிழர் இனமும்
புண்ணியம் பெற்று உயர்ந்திட வாழ்த்து.

மாடுக ளன்று காடுகள் நீக்கி
அயல்நில மெல்லாம் வயல்நில மாக்கப்
பாடுகள் பட்ட பாட்டினைக் கண்ட
பைந்தமிழ் மக்கள் பண்புடன் உணர்ந்து
தயிரும் மோரும் வெண்ணெயு மெடுக்கத்

தக்க சமயம் பாலையும் தந்து
வயிறால் வந்திடும் சாணத் தையும்
பயிரை வளர்த்து உயிரைக் காக்க
அறுவடைக் கதவைத் திறந்திட வைத்த
அதற்கும் மதிப்பு மரியா தையென
மாட்டுப் பொங்கல் படைத்தன என்றே
உறவின ரோடு உறவுகொண் டாடி
உறவைப் புதுப்பித் துக்கொண் டாடிட
உறவுப் பாலத் தைப்பலப் படுத்தி
நண்பர் களோடும் நன்றாய் வாழ்ந்து
ஒன்றாய் மகிழ்ந்து ஒற்றுமை யாக்கிட
காணப் பொங்கலைக் காண்பது மன்றோ
கண்கொள் ளாத காட்சிய தன்றோ!
பகைமை பசிநோய் நீங்கிட வென்று
சிறப்புப் பூசை செய்திடு வார்கள்
தகைமை நிலைமை சரியென வாக
அமைந்தே வாழ்வு மலர்ந்திட வாக!

எத்தனை பேர்கள் பொங்கலின் சிறப்பினை
இத்தனை யென்று எடுத்து இயம்பினும்
அத்தனை பேர்களின் எழுத்தி னாலும்
பொங்கலின் மகிமை முற்றுப் பெறாது.
தொட்டனைத் தூறும் மணற்கே ணியைப்போல்
தொடத்தொட விடயம் தொடர்ந்து ஊறுது.

மங்காப் பொங்கலின் மகிமை கூறிட
பொங்கிப் பொங்கி விடயம் எழுகுது.
தங்கச் சொன்னால் தங்கா தென்று
பொங்கா திருக்க இயலா திருக்குது.

இன்பப் பொங்கல் இன்பத் திருநாள்
இனிமை யாக ஆகிட லாகத்
துன்பம் நீங்கித் துயரம் நீங்கி
இனிமே லின்பம் பொழிந்திட லாக!

# விழிபேசும் சித்திரமே!



**அச்சுவேலி கணேசன்**

மொழிகொண்டு உருவான விழிபேசும் சித்திரமே-உன்னைக்
களிகொண்டு வாழ்த்துகிறேன் கண்மணியே நித்திலமே
மொழியேது உனக்கீடு முத்தமிழே முதுமொழியே-தமிழ்
அழியாத செம்மொழியே, அணையாத, தீபமே!

பூமகளே பூங்குழலி பூவிழியே புன்னகையே-அழகுத்
தாமரையே மாமலரே தங்கநிலாக் காரிகையே
காமதேவன் கரும்புவில்லே காவிய நாயகியே -தமிழே
வாமகளே! வான்மதியே விழிபேசும் சித்திரமே!

கவிஞனின் கற்பனையே காவியத்தின் சொற்சுவையே-நீ
புவிதனிலே வேதமொழி, பூங்குழலின் நாதமொழி
செவிதனிலே தேனூறும் சித்தர்களின் ஞானமொழி-அமுதக்
கவிசொரியும் கம்பனது காவியத்தேன் அருள்மொழியே!

குழிதோண்டிப் புதைத்தாரே, விழிபேசும் சித்திரத்தை-கொடும்
பழிசொல்லிப் பைந்தமிழைப் பாதகர் பரிகசித்தே
துளிகூட இரக்கமின்றி நூலகத்தை எரித்தாரே--அற
வழிகாட்டும் ஆலயத்தை எரியூட்டி அழித்தாரே!

மாபெரும் கோபுரங்கள் மக்களின் மனைவாசல்-அழிந்து
பேய்வரும் சுடுகாடாய் கொலைக்கள மானதங்கே
சீர்மேவும் செந்தமிழும் சீரழிந்து சிதைந்ததங்கே-கொடும்
போர்மேவிப் போனதாலே பொல்லாப்பு மலிந்ததங்கே

சித்திரம்  பேசிய செந்தமிழ் மண்ணிலே-குருதி
நித்தமும் சொரிந்து நீராகப் பாய்ந்ததம்மா
வீழ்ந்து கரிந்தன விழிபேசும் சித்திரங்கள்-அங்கே
ஆழ்ந்து புதைந்தன அறநிலைக் கூடங்களே!

சித்திரப் பாவைகளே செந்தமிழ் மங்கையரே-நீவீர்
அத்தனை இன்னலுற்றும் அறவழி நின்றீரே
வித்தகப் பெண்மானே விழிபேசும் சித்திரமே-ஒளி
குத்தும் விழிச்சுடர்கள் கோபுர தீபங்களே!



# கனியின்
# அறிவியற் கவிதைகள்



**கனி விமலநாதன்**

## 1. ஏக்கம்

அண்ணனைத் தம்பியை அண்டிட விட்டிடாது
கண்டபடி ஏசிக் களித்தாரே - மண்ணொடு
விண்ணளந்தோர் வீணர் அளப்பை வியந்தின்று
கண்ணற் றிருப்பதைக் காண்.

## 2. அறிவியலில் பெருமை

உருளும் விழியுள் உருளும் உலகம்
உருளநாம் பெற்றோம் பலவே - இருளின்
உருவை உருட்டி யகற்று மவற்றின்
பெருமைகள் கூறல் பெரிது.

## 3. புடவி

ஆதியொளிப் பொட்டொன்று ஆர்ப்பரித் தக்கணமே
பூதியா யெங்கும் பரவிட - சோதியதன்
சொட்டுகள் ஒட்டிச் சொரிந்த மலர்களைக்
கட்டுக்குட் காட்டுகிறார் காண்.

புடவி - பிரபஞ்சம்
பூதி - பலூன்

## 4. அகழ்வாய்வின் பெருமை

மண்கிண்டி முன்னோர் மறைதேடும் வல்லவர்
கண்டவுண்மை காற்றிற்கோ சொல்லிடுநீ - விண்காண்
புகழோர் விரிப்பின் வியப்புகள் நன்றே
இகத்தினில் இன்றும் இருக்கு.

## 5. கூர்ப்பு

மாறா ததனின் மயக்கத்தின் தோற்றிலே
தேறா துதிர்ந்தன தோற்றன - கூறா
விடயத்தைக் கூறும் விதியின் கதையை
வடமெனப் பார்ப்போம் வடித்து.

## 5. உயிரினங்களின் உடல்

சல்லிமண் நீரைச் சரியாய்க் கலந்தொரு
கல்லாக்கிப் பல்நாள் கடிதாக்கி - நல்ல
பொழுதி லவற்றைப் பொருத்திப் பொறியாய்
அழுத்திநீ தந்த தழகு.



# கொரோனா தந்த கொடிய வாழ்வு



**எஸ்.கே.குமரகுரு**

பாலன் வரவை வரவேற்கப்
    பாரில் உள்ளோர் காத்திருக்க
காலன் போல வந்ததிங்கே
    காற்றில் பரவும் வைரஸ்சு
ஞாலம் முழுவதும் தாக்கிடவே
    நடுங்கின எல்லா நாடுகளும்
பாரை உலுக்க மக்களுமே
    பயந்து வீட்டில் தங்கினரே.

ஆழ்வோர் அன்பான வேண்டுதல்
    அனைவரும் வீட்டில் இருங்கள்.
வாழ்க்கைச் செலவது கவலையா
    வழங்கினர் நிதியது யாவர்க்கும்.
தொழிலது இழந்தோர், வழங்குவோர்
    தொடர்ந்து பெற்றனர் நிவாரணம்
எழிலாக வாழ்ந்த அனைவரும்
    ஏற்றனர் புதிய வாழ்வினை.

பண்டிகைகள் இல்லை இங்கே
    பாடசாலைகள் இயங்க வில்லை
பண்டங்கள் விற்றுத் தீர்ந்த
    பலசரக்குக் கடைகள் முன்னே

திண்டாடும் மக்கள் கூட்டம்
தடுத்து நிறுத்திடக் காவலர்கள்
முண்டியடித் தவர்முந் தியதால்
மாண்டு போனவர் கதையுமுண்டு.

வீடுகளில் இருங்கள் பாதுகாப்பாய்
வீதிகளுக்குத் தேவையின்றி வரவேண்டாம்
தேடிவரும் துயரத்தைத் தடுத்திடவே
தோள்கொடுத்து உதவுங்கள் அனைவரும்
கூடவேண்டாம் மக்களே ஒன்றாக
குலமறுக்கும் கொரோனாவை விரட்டுவோம்
நாடிடுவோர் நம்முற வாயினும்
நாட்டினது நிலவரத்தை நவின்றிடுவீர்.

மனித மனங்களில் பதட்டம்
மனதை உருக்கிய செய்திகளால்
தினமது செத்து மடிந்தனர்
திக்கெட்டும் ஆயிரக் கணக்கானோர்
மனநல நோயால் பாதித்தனர்
மக்களில் பெருந்தொகை யானோர்
இனமத பேதமின்றி அனைவரும்
இறைவன் பாதம் பற்றினரே.

ஆரம்ப வேளையில் பதற்றம்
அனைவர் மனதிலும் தயக்கம்
வாரங்கள் தொடர்ந்து மாதமாய்
மக்கள் மனதில் சலிப்பும்
ஊரடங்குச் சட்டம் இல்லாமல்
ஊரே உறங்கிய அவலநிலை
போர்க்காலச் சூழலாய் மாறினவே
பூமியின் புகழ்பெற்ற நகரங்கள்.

கனடியப் பிரதமர் மக்களை
காத்திட வேண்டி நாளும்
முன்வைத்த முக்கிய திட்டங்கள்
முழுமை பெற்றுச் சட்டமாக
தன்னலம் மறந்துமே சார்ந்த
தத்தம் கட்சிப் பேதமின்றி
மனமது விரும்பி அனைவரும்
வழங்கினர் அவர்தம் ஆதரவை.

கொரோனா எனுமோர் வைரஸ்
கொடிய தாக்கம் வேகமாய்
பரவிய போது மரணப்
பயத்தால் மக்கள் நடுங்க
அரச இயந்திரம் அவசர
அறிவிப்பு அடிக்கடி விடுத்தது
மிரண்டோர் வீதிக்கு இறங்கி
வேண்டினர் நாளாந்த இயல்பினை.

இப்போது இல்லை இயல்பு
இருங்கள் வீட்டில் அனைவரும்
தப்பிப் பிழைக்க வேண்டின்
சமூக இடைவெளி பேணுக
எப்போதும் எங்கும் பின்பற்ற
எடுத்து இயம்பின அரசுகள்
தப்பாமல் சட்டமும் வந்தது
தண்டனை செலுத்தினர் தவறுவோர்.

# ஈழத்தில் பதிகொள் முருகன்

(இன்னிசை வெண்பா)



**மார்க்கம் சந்திரன்**

மாவை முருகன் மலரடி சென்றுமே
தேவை எதுவெனத் தேம்பி அழுதிடக்
கோவையாய் வந்த கொடுநோய் முழுவதும்
ஆவிபோல் நீங்கி விடும்.

நல்லூர் நகரிலே நல்லதோர் காவலாய்
செல்வச் செழிப்புடன் சேமம் புரிகிற
வல்லமை பெற்ற விநாயகன் தம்பியே!
பொல்லாப் பிழைகள் பொறு.

சன்னிதிக் கந்தனே சன்னத வேலனே!
அன்னம் வழங்கி அடியார் பசிதீர்க்கும்
பார்வதி மைந்தனே பாவம் அகற்றியே
சோர்விலா வாழ்வு வழங்கு.

கதிர்காமக் கந்தனே காவடிப் பக்தா
விதியின் வசத்தால் வினைகள் புரிந்தோர்
மதியைத் திருத்தி மறுவாழ்வு நல்கி
அதிபனாய் வாழ அருள்.

சேமம் - நல்வாழ்வு அதிபனாய் - தலைவனாய்

# ஈழமண்ணின் ஈசுவரங்கள்

(இன்னிசை வெண்பா)

**மார்க்கம் சந்திரன்**

கீரி மலையில் கிழக்குத் திசைபார்த்து
பாரியார் பார்வதி பக்கத் துணையுடன்
காரியம் ஆற்றும் கருணைக் கடவுளே
பாரினில் உள்ளோரைப் பார்.

திருக்கே சுவரத்தில் தேவியுடன் தங்கி
வருந்தும் அடியார்க்கு வாழ்வுதரும் ஈசுவரா
மூட்டு வலியாலே வாட்டும் உடலினை
மீட்டுத் தருவாயே மாற்று.

கோணேசர் குன்றில் குடியிருக்கும் கோமானே!
சாணேறி ஆழும் சறுக்கும் விதியகற்றி
கோலமான வாழ்வைக் குறையின்றித் தந்திட
சாலவே வேண்டுகிறேன் சாற்று.

சிலாபம் நகரிலே சீருடன் சூழ்ந்து
கலாப மயில்போலக் காட்சியைத் தந்துமே
காண வருவோர் கவலையைப் போக்கிடும்
காணக மேனியனைக் காண்.

காலிப் பதியின் கடற்கரைப் பக்கமாய்
மாலிகை தாங்கியே மன்மதனாய்க் காட்சிதரும்
தொண்டீ சுவரச் சுவாமியின் சன்னிதியில்
மண்டி மனதால் மயங்கு.

மாற்று - நீக்கு, மாற்றுமருந்து
சாலவே - மிகவும்
சாற்று - நிறையச்செய்
காணகம் - பொன்
மாலிகை - பூமாலை
மயங்கு - வருந்து, கலந்திரு, நெருங்கியிரு.



# தை மரபுத்திங்கள்



நாகேஸ்வரி சிவகுருநாதன்

மரபுத் திங்கள் மங்கல விழா
வரமாய் எமக்குக் கனடா நாடும் வழங்கிறதே.
பண்டைத் தமிழன் பாரம்பரியம் என்றும் நினைக்கும்
தண்ணளி கொண்டு தரணியில் வாழ்வோம்.

ஆண்டாண்டு காலமாய் ஆன்றோர் வகுத்த
நீண்டு தொடரும் நன்னெறி விழாக்கள்
ஈண்டு அனைவரும் இன்முகத்தோடு இணைந்தே
காண்பதே இன்பமாம்.

பொங்கல் என்றும் புதுவருடப் பிறப்பென்றும்
மங்கா ஒளிவீசும் மங்கல விழாக்களே
எங்கும் பேருவகை எழிற்கோலம் காணலாம்
மங்கல நாளே மனமிக மகிழ்வோம்.

கனடா நாடும் கருதி எமக்கு
தனமாய் ஓரிடம் தந்து மகிழ்கிறதே.
முன்செய் தவப்பயன் போலும் நிகழ்வு
நன்றாம் நாமும் நன்றி சொல்வோமே.

என்றும் இளமையே எம்தமிழ் அன்னையே
தனமாய் ஓரிடம் தந்து மகிழ்கிறதே
முன்செய் தவப்பயன் போலும் நிகழ்வு
நன்றாம் நாமும் நன்றி சொல்வோமே.

என்றும் இளமையே எம்தமிழ் அன்னையே
நன்றே இறைவன் நலமாய் அருளினனே
தமிழ்மொழி இறைமொழி இல்லையே
வளம்பெற வளர்ப்போம் தமிழையே.

அனுபவம் மிக்கோரின் அரியவழி காட்டல்
அருமையாய் வாழ்வில் கிடைத்த பொக்கிசம்
பெருமையாய் இருக்கிறது பெறற்கரிய பெரும்பேறே
இருத்தியே மனத்தில் இனிதே போற்றிடுவோம்.





# தமிழர் திருநாள்



**மானியூர் மைந்தன் ப. சயந்தன்**

கானகம் திருத்திக் கழனிக ளாக்கியே
வானம் பார்த்து எங்கள் பாட்டன்
வளமொடு வாழவே வகுத்த தொழிலென
உழுதுண்டு உயர்ந்தவர் போற்றிடும் தினமிது!

முத்தான வியர்வைதனை மூலதன மாக்கியே
முப்போகம் விளைவித்து மகிழ்வாய் வாழ்ந்தவர்
வையம் செழிக்கவே மெய்யாய் உழைத்தவர்
தைமகள் வருகையைத் துதிக்கும் தினமிது!

மாவிலைத் தோரணங்கள் வாசலிலே வரிசைகொள்ள
வண்ணச் செங்கரும்பும் வாசமலர்களும் அலங்கரிக்கக்
கார்கூந்தல் கோதையர்கள் தீட்டிவைத்த கோலமுடன்
பொங்கி மகிழ்ந்திடும் பாங்கான பண்டிகையாம்!

இந்த முத்தான விழாக்களெல்லாம்
எம்முன்னோர் சொத்தாக்கி வைத்தனர்.
ஊரினிலே விழாக்களென்றால் எங்குமே உற்சாகம்!
உழவுத் தொழிலை உயர்வாய்க் கொண்டு
உழலும் புவிவாழ்ந்து உயர்ந்த தமிழ்க்குடி!

தைபிறந்திடத் தமிழர்க்கு வழிபிறந்திடும்
மெய்யுழைப்பிலே மகிமை செய்தவர்

மேதினியெங்கும் மேன்மை பெறட்டும்!
ஏர்பிடித்தவர் ஏற்றம் அடைந்துமே
ஊர்சிறக்கவே உயர்ச்சி அடையட்டும்!

தாயவள் போலத் தூய அன்பொடு
தைமகள் மெல்லத் தவழ்ந்து வருகிறாள்
தரணியெங்கும் தமிழது தழைக்க
திசையெங்கும் வண்ணக் கதிரது பரப்பி
கதிரவன் மலர்வில் அழகாய் மிளிர்கிறாள்.

இந்திர விழாவும் தைநீ ராடலும்
உந்திய சிறப்பினை உற்றதோர் மரபாய்ச்
சந்தி தெருவெலாம் சர்க்கரைப் பொங்கலில்
பந்தி வைத்துப் பரிமாறி மகிழ்ந்திட்ட
சிந்தை நிறைந்த சித்திர நிகழ்வுகள்!

போரெங்கள் வேர்பிடுங்கி வீசியெறிந்த போதும்
அன்னிய மண்ணிலும் அழகாய்த் துளிர்விட்ட
தமிழின நாற்றுக்கள் நாங்கள்!

உடல்கொண்ட உயிரோடும்
இடர்வந்து இடம்பெயர்ந்து
ஏதிலியாய் வீதியிலே வந்தபின்னும்
தாயகத்தைக் காதலிக்கும் தமிழ்ச்சாதி என்பதால்
நுண்கலைசேர் பண்டிகைகள்
கொண்டாடி மகிழ்கின்றோம்

இக்கரையில் வாழ்ந்தாலும்
அக்கரையில் வாழ்ந்தாலும்
எக்கரையில் வாழ்ந்தாலும்
அக்கறையோடு பொங்கலிட்டு
தாய்மண் நினைவோடு அகமகிழ்வோம்!

# “தாயின் கருணையைப் பாடுவேன்”

*இருவிகற்ப நேரிசை வெண்பா*



**சோக்கல்லோ சண்முகம்**

தாயின் கருணையைத் தந்தையின் ஆற்றலைச்
சேயின் செழும்தமிழ்ச் செல்வத்தைக் - கோயிலில்
ஆடும் ஐயனின் அழகையும் போற்றியே
பாடுவேன் பைந்தமிழ்ப் பா!

## “தேவதையென் தாய்”

*இருவிகற்ப நேரிசை வெண்பா*

அருளொழுகும் கண்கள் அமைதிதரு முள்ளம்
இருகரமும் நீக்கிவிடும் இன்னல் - பெருநதியாய்ப்
பொங்கிவரும் பேரன்பு போற்றும் பெருங்குணங்கள்
தங்கிவந்த தேவதையென் தாய்

## பால்நினைந் தூட்டும் தாயவள்

*நேரிசை ஆசிரியப்பா*

பால்நினைந் தூட்டும் தாயவள் தனக்கு
ஆலெனத் தழைத்த அவர்தம் கொழுந்துகள்
வேலெனப் பாயும் வினைதனைச்
சால்பென எண்ணிச் சாற்றுதல் தகுமோ?

## வாழ்த்துவன் தாய்நாடே

*நிலைமண்டில ஆசிரியப்பா*

மருதக் குளத்து மகரந்தக் காற்று
வருடும் வேலியின் வண்ண மலர்கள்
வளமும் பெருக்கும் வனப்புச் சோலையின்
அழகை வாழ்த்துவன் என்தாய் நாடே

## தமிழால் உயர்ந்தோர்!

*நேரிசை வெண்பா*

தமிழுக் கணிகள் தரணியோர் செய்தார்
தமிழாலே மேன்மை பெறாத - தமிழருண்டோ?
தம்தழிழைப் போற்றித் தமிழ்செய்து போற்றினோர்
எம்மதமும் போற்றுவார் ஏற்று!

## "அருந்திய குவளையை அலசியே கவிழ்த்தல்"

*நேரிசை ஆசிரியப்பா*

கவிதை வகுப்பில் காண்பது களிப்பெனில்
கவிகள் சிரிக்க கடமைகள் சொல்வேன்
இருந்த இடத்தில் இருக்கையை வைத்தல்
அருந்திய குவளையை அலசியே கவிழ்த்தல்
அலறிய படியே அடுப்படி முடித்து
விலகும் வேளையில் வேலைபல முடித்தே
தேறவே இங்கு தோன்றினோம்
மாறவே வேண்டாம் மாற்றம் காண்பமே!

**"இன்பம் நிரந்தர இருப்போ"**

*நேரிசை ஆசிரியப்பா*

நள்ளிராத் தூக்கம் நங்கையின் அணைப்பு
நள்ளிரா விழிப்பும் நாரியின் பிரிவே
இன்பம் நிரந்தர இருப்போ
துன்பத் தொடக்கத் துளியு மிதுவே!


**"வன்செயல் வந்தன வலிகளும் தந்தன"**

*நிலைமண்டில ஆசிரியப்பா*

தென்றலும் வந்துதிரை விலக்கி யதுவே
வன்செயல் வந்தன வலிகளும் தந்தன
தென்றலும் ஓர்நாள் தோன்றுமே புயலாய்
இன்பமும் துன்பமு மிணைவ தியற்கையே!



# கண்ணீர் அஞ்சலி





கவிஞர்
அச்சுவேலி கணேசன்

கலாநிதி
தில்லை சிவகுமார்

எமது கழகத்தின் உறுப்பினர்களின்
மறைவுக்காக மிகவும் மனம்
வருந்துகிறோம்.
அவர்களின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.



**வாழ்க வளத்துடன்.....**